சார்பு நீதிமன்றம், விருதுநகர்

M.C.O.P.No: 18/2020 Date: 30.04.2026

எதிர்மனுதாரரின் தரப்பு சாட்சி–1(R.W.1) வாக்குமூலம் (1872ம் ஆண்டு சாட்சிய சட்டம் 144வது பிரிவின்படி திரு.N.வீரராஜ், கிரேடு –2 பெஞ்ச் கிளார்க் என்பவரால் ஆணையிட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கதிரேசன் | சாதி | : | |
| த/பெ | : | பாண்டியன் | சமயம் | : | |
| கிராமம் | : | அருப்புக்கோட்டை | தொழில் | : | |
| தாலுகா | : | அருப்புக்கோட்டை | வயது | : | 55 |

முதல் விசாரணை –

நான் இணை இயக்குநர், மருத்துவம் ஊரக பணிகள் மற்றும் குடும்பநலம் விருதுநகரில் உதவியாளராக பணியாற்றி வருகிறேன். நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்கிறேன். அழைப்பாணையில் கோரியுள்ள ஆவணங்கள் கொண்டு வந்துள்ளேன். 21.01.2021ம் தேதி செல்வராஜ் என்பவர் மருத்துவக்குழுமம் முன்பு ஊனச்சான்று பெறுவதற்காக ஆஜராகி உள்ளார். அப்போது மருத்துவக்குழுமத்தில் மருத்துவர் ஜெகநாதன், இணை இயக்குநர் மருத்துவர் ரா.மனோகரன் மற்றும் ஒரு மருத்துவர் இருந்துள்ளனர். என்னென்ன ஆவணங்கள் அடிப்படையில் மனுதாரர் செல்வராஜ்–க்கு ஊனச்சான்று வழங்கப்பட்டது என்றால் லட்சுமிபிரியா மருத்துவமனையின் டிஸ்சார்ஜ் சம்மரியின் அடிப்படையில் ஊனச்சான்று வழங்கப்பட்டது. செல்வராஜ் என்பவருக்கு ஊனச்சான்று வழங்கியதற்கான கோப்பு உண்மை நகல் **சா.சா.ஆ.1** ஆகும்.

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை–**

மனுதாரர் மருத்துவக்குழுமத்தால் பரிசோதனை செய்யப்பட்டு, அதன் பின்னர் ஊனச்சான்று வழங்கப்பட்டது என்றால் சரிதான்.